# அற்புதத் திருவந்தாதியில் குற்றியலுகர இலக்கணத்தின் பயன்பாடு – ஓர் ஆய்வு

## A Study on The Usage of *Kutriyalukaram* Grammar in Arputha *Thiruvandhadhi*

பாஸ்கரன் கிருஷ்ணன் / Paskaran Krishnan [1]

மனோன்மணி தேவி அண்ணாமலை / Manonmani Devi M.A.R Annamalai[2]

Date of submission: 2025-07-05
Date of acceptance: 2025-07-10
Date of Publication: 2025-07-23
Corresponding author's Name:
Manonmani Devi M.A.R Annamalai
Email: manonmanidevi@fbk.upsi.edu.my

**Abstract**

Arputha *Thiruvandhadhi* is considered a work of Tamil literature (*sitrilakkiyam*). A poetic form where each verse begins with the ending word of the previous verse is called *andhadhi*. This text primarily reflects the path of Shaivism, centering on devotion to Lord Shiva and complete surrender to the divine. The objective of this study is to identify and analyze the use of *Kutriyalugaram* grammar features within the verses of Arputha *Thiruvandhadhi*. This research is conducted as qualitative research using an explanatory method. The key finding of this research is the presence and application of *Kutriyalugaram* in selected verses. Out of the total 101 verses in Arputha *Thiruvandhadhi*, 10 verses were chosen for detailed analysis in this research.

**Keywords:** *Arputha Thiruvandhadhi, Kutriyalugaram*, Tamil Literature (*Sitrilakkiyam*)

### முன்னுரை

### தமிழ் இலக்கியம் – அற்புதத் திருவந்தாதி

புனிதவதியார் எனும் இயற்பெயர் கொண்ட காரைக்காலம்மையாரின் வரலாறு பெரியபுராணத்தில் மிகவும் அழகாக எழுதப்பட்டுள்ளது. காரைக்காலம்மையார் இயற்றிய அற்புதத் திருவந்தாதி எனும் சமய பக்தி நூல் இவ்வாய்வின் மையப் பொருளாக அமைந்துள்ளது. 101 பாக்களைக் கொண்டது அற்புதத் திருவந்தாதி. சிற்றிலக்கிய நூலாகக் கருதப்படும் அற்புதத் திருவந்தாதி, சைவ நெறியாகிய சிவபக்தியையும் முழுமையாகச் சரணடையும் நிலையையும் மிகவும் சிறப்பான முறையில் சொல்லப்பட்டிருக்கின்றன. சிவபெருமான் திருவுருவச் சிறப்பும் திருவருட் சிறப்பும் இறைமைக் குணமும் பக்தியாளருக்கு பெருவிருந்து அளிக்கும் வகையில் இந்நூல் அமைந்திருக்கிறது. இவ்வந்தாதியில் முதல் பாடலில் இறுதிச் சொல் அடுத்த பாடலின் முதல் சொல்லாக வருவதால், இது அந்தாதி பாடல் என்று அழைக்கப்படுகிறது. அந்தத்தை ஆதியாக கொண்டுள்ளதால் இதனை ஆதி அந்தாதி என்பர். அற்புதத் திருவந்தாதி வெண்பா யாப்பில் அமைந்துள்ளது. (துர்கா & நல்லசிவம்,

[1]The Author, is a Postgraduate Student, Faculty of Languages and Communication, Sultan Idris Education University, Malaysia.

[2]The Author, is an Associate Professor, Faculty of Languages and Communication, Sultan Idris Education University, Malaysia. manonmanidevi@fbk.upsi.edu.my. baskaransamuel86@gmail.com

2022). அந்தாதிப் பாடல்கள் இவ்வாய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.

## தமிழ் இலக்கணம் – குற்றியலுகரம்

இலக்கணம் என்பது ஒரு மொழியின் அடையாளம் என்று கூறலாம். இலக்கணம் இல்லாத மொழிகள் இங்கு இல்லை. ஒரு மொழியின் கண்களாகத் திகழ்கின்றன இலக்கணம் (சுப்புரெட்டியார், 2000). நாம் சரியான வாக்கியத்தை அமைப்பதற்கும் பேசுவதற்கும் எழுதுவதற்கும் ஒரு மொழியின் இலக்கணம் மிகவும் உறுதுணையாக இருக்கிறது (மோகனதாஸ், 2005). தமிழ் இலக்கணம் நமக்கு கிடைத்த ஒரு பொக்கிஷம் என்றே கூறலாம். தமிழ் இலக்கணத்தில், உகரம் ஒரு மாத்திரை உடையது. இந்த உகரமானது ஒரு மாத்திரை அளவிலிருந்து குறைந்தோ குறுகியோ ஒலிக்கும்போது அது குற்றியலுகரம் (குறுகி ஒலிக்கின்ற உகரம்) என்று அழைக்கப்படும். வல்லின மெய்களோடு வரும் உகரம் மட்டுமே குற்றியலுகரமாக வருவதற்கு வாய்புண்டு. எடுத்துக்காட்டாக, கு, சு, டு, து, பு, று ஆகிய எழுத்துகள் மட்டுமே இதில் அடங்கும் என்று தமிழ் இலக்கணம் கூறுகின்றது. பொதுவாக, உகர உயிரியல் பாதியளவே ஒலித்து 1 மாத்திரை உடைய முழு உகரங்கள் அல்ல என்பதை தெளிவுப்படுத்தி உணர்த்துவதற்குக் குற்றியலுகரம் பயன்படுதப்படுகிறது. இந்தக் குற்றியலுகரம் சார்பெழுத்துகளுள் ஒன்றாக விளங்குகிறது. குற்றியலுகரமானது அதன் ஈற்றயல் (இறுதிக்கு முந்திய) ஒலியின் பாதிப்பால் வேறுப்படுவதால், வேறுப்பாட்டின் அடிப்படையில் குற்றியலுகரம் 6 வகைப்படுகிறது (முகம்மது, 2022).

## குற்றியலுகர வகைகள்

குற்றியலுகரத்தின் வகையை எளிதில் கண்டறிய ஒரு சொல்லின் இறுதியெழுத்துக்கு முன்னெழுத்து எந்த வகை அல்லது இனத்தைச் சார்ந்தது எனக் கண்டறிந்து, அவ்வெழுத்து எந்த இனத்தைச் சார்ந்ததோ அதற்கேற்ப இனப்பெயரரை அக்குற்றியலுகரத்துக்கு இடவேண்டும் (அண்ணாமலை, 2025). கீழ் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணை, குற்றியலுகர வகைகளை மேலும் தெளிவுப்படுத்துகிறது.

### அட்டவணை 1: குற்றியலுகர வகைமைகள்

| | வகை | விளக்கம் | காட்டு |
|---|---|---|---|
| 1. | வன்றொடர்க் குற்றியலுகரம் | கு, சு, டு, து, பு, று முன் வல்லின மெய் வருவது | தேக்கு, மூச்சு நட்பு, பத்து, உப்பு |
| 2. | மென்றொடர்க் குற்றியலுகரம் | கு, சு, டு, து, பு, று முன் மெல்லின மெய் வருவது | பங்கு, பஞ்சு, வண்டு, பந்து, அம்பு |
| 3. | இடைத்தொடர் குற்றியலுகரம் | கு, சு, டு, து, பு, று முன் இடையின மெய் வருவது | மார்பு, ஆய்வு, சால்பு, வீழ்து, தெள்கு |
| 4. | ஆய்தத் தொடர்க் குற்றியலுகரம் | கு, சு, டு, து, பு, று முன் ஆய்த எழுத்து வருவது | அஃது, எஃது, கஃசு, எஃகு |
| 5. | உயிர்தொடர்க் குற்றியலுகரம் | கு, சு, டு, து, பு, று முன் உயிர் எழுத்து, உயிர் மெய் வடிவில் வருவது | வயிறு, அரசு, மாநாடு, சாக்காடு, பாடாது |
| 6. | நெடிற்றொடர்க் குற்றியலுகரம் | கு, சு, டு, து, பு, று முன் தனிநெடில் வருவது | பாகு, வீடு, மாது, ஆறு, காடு |

## ஆய்வு நோக்கம்

காரைக்கால் அம்மையார் இயற்றி சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்றாக விளங்கி வரும் அற்புதத் திருவந்தாதி பாடல்களில் பயன்படுத்தப்பட்ட குற்றியலுகர இலக்கணப் பயன்பாட்டை ஆராய்வதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

## ஆய்வு வரையறை

அற்புதத் திருவந்தாதியிலுள்ள 101 பாடல்கள் முறையே ஆராயப்பட்டன. பின், அப்பாடல்களில் 10 பாடல்கள் மட்டுமே முறையே தேர்ந்தெடுக்கப்பட்டன. தேர்ந்தெடுக்கப்பட்ட 10 பாடல்களில் குற்றியலுகரப் பயன்பாட்டை அடையாளங்கண்டு விளக்கமளிக்கும் வகையில் இவ்வாய்வின் வரையறை வரையறுக்கப்பட்டுள்ளது. இவ்வாய்வுக்கு கி.வா.ஜகந்நாதன் அவர்கள் இயற்றிய 'காரைக்காலம்மையாரின் அற்புதத் திருவந்தாதி' எனும் நூல் முதன்மை நூலாக பயன்படுத்தப்பட்டது.

## ஆய்விலக்கிய மீள்நோக்கு

சுதா குஞ்சுராமன் (2025), திருக்குறளில் குற்றியலிகரத்தின் பயன்பாடு – ஓர் ஆய்வு எனும் தலைப்பில் ஆய்வு ஒன்றினை மேற்கொண்டுள்ளார். இதில், திருக்குறளில் இடம்பெற்றுள்ள குற்றியலிகரத்தைக் கண்டறிந்து விளக்கும் வகையில் அமைந்துள்ளது. இவ்வாய்வில், அறத்துப்பால், பொருட்பால், இன்பத்துப்பால் ஆகியவற்றில் காணப்படும் குற்றியலிகரங்கள் கண்டறியப்பட்டன. ஜெயஸ்ரீ சுப்பிரமணியம் (2025), திருக்குறளில் குற்றியலுகரம் இலக்கணத்தின் பயன்பாடு – ஓர்

ஆய்வு எனும் தலைப்பில் ஆய்வு மேற்கொண்டு, திருக்குறளில் பொருட்பால் பிரிவில் அமைந்திருக்கும் குறள்களில் குற்றியலுகரப் பயன்பாட்டை ஆராய்ந்துள்ளார். துர்கா & நல்லசிவம் (2023), அற்புதத் திருவந்தாதியில் பக்தியுணர்வு எனும் தலைப்பில் ஆய்வு ஒன்றினை மேற்கொண்டுள்ளனர். அவர்கள் அந்தாதிப் பாடல்கள் வெளிப்படுத்தும் பக்தியுணர்வை ஆராய்ந்து கட்டுரையைப் படைத்துள்ளனர். அற்புதத் திருவந்தாதியில் காரைக்காலம்மையார் சிவபெருமான் மீது பற்றுக்கொண்டு காதல் பூண்டு பக்தியுணர்வை வெளிப்படுத்தும் முறையை இவ்வாய்வு நமக்கு எடுத்துரைக்கிறது. ஆய்வாளர்கள், அற்புதத் திருவந்தாதியில் குற்றியலுகர இலக்கணத்தின் பயன்பாடு குறித்து ஆராய்ந்து இருப்பதால், இவ்வாய்வு முன்னாய்வுகளோடு வேறுப்படுகின்றது.

## ஆய்வு அணுகுமுறை

அற்புதத் திருவந்தாதி பாடல்களில் குற்றியலுகர இலக்கணத்தின் பயன்பாட்டினை ஆராய்வதால் இஃது ஒரு பண்புசார் ஆய்வாக அமைகிறது. இது பகுப்பாய்வு விளக்க முறையில் இருப்பதாலும் இதை விளக்கமுறை ஆய்வாகவும் கொள்ளலாம். இந்த ஆய்வில் 2 பண்புசார் அணுகுமுறைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. முதலாவதாக நூலகப் பகுப்பாய்வு முறை. அற்புதத் திருவந்தாதி எனும் சிற்றிலக்கிய நூலிலுள்ள் பாடல்களில் குற்றியலுகரத்தை ஆராய்வதால், இதில் நூல் பகுப்பாய்வு முறை கையாளப்பட்டுள்ளது. இரண்டாவதாக, அற்புதத் திருவந்தாதி பாடல்களை ஆழமாக ஆராய்வதன் வழி உள்ளடக்க பகுப்பாய்வு முறையும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதற்கு ஆய்வாளர், நூல்கள், ஆய்வேடுகள், ஆய்வுக் கட்டுரைகள், இணைய பதிவுகள் முதலானவற்றைத் தரவுக்கான மூலங்களாகப் பயன்படுத்தியுள்ளார். அவற்றின் கண்டுபிடிப்புகளை மையமாக வைத்து அற்புதத் திருவந்தாதியில் குற்றியலுகர இலக்கணத்தின் பயன்பாட்டினை ஆராய்ந்துள்ளார்.

## ஆய்வின் கண்டுபிடிப்பு

இவ்வாய்வில், அற்புதத் திருவந்தாதி பாடல்களில் பயன்படுத்தப்பட்ட குற்றியலுகர தமிழ் இலக்கணக் கூறுகள் 10 பாடல்களில் கண்டறியப்பட்டன.

### 1. அற்புதத் திருவந்தாதி – பாடல் 1 – நீலகண்டன்

பிறந்து மொழிபயின்ற பின்எல்லாம் காதல்

சிறந்து நின் சேவடியே சேர்ந்தேன் – நிறந்திகழும்

மைஞ்ஞான்ற கண்டத்து வானோர் பெருமானே... (திருப்பாடல் 1)

இப்பாடலில், குற்றியலுகரப் பயன்பாடு கண்டறியப்பட்டது. இங்கு, மென்றொடர்க் குற்றியலுகரமும் வன்றொடர்க் குற்றியலுகரமும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

**அட்டவணை 2: மென்றொடர்க் குற்றியலுகரம், வன்றொடர்க் குற்றியலுகரம்**

| குற்றியலுகர வகை | விளக்கம் | சொற்கள் |
|---|---|---|
| மென்றொடர்க் குற்றியலுகரம் | மெல்லினமெய்யின் வருகை | பிறந்து, சிறந்து |
| வன்றொடர்க் குற்றியலுகரம் | வல்லினமெய்யின் வருகை | கண்டத்து |

### 2. அற்புதத் திருவந்தாதி – பாடல் 2 – அன்பு அறாது

என்புஅறாக் கோலத்து எரிஆடும் எம்மானார்க்கு

அன்பு அறாது என் நெஞ்சு அவர்க்கு... (திருப்பாடல் 2)

இப்பாடலில், குற்றியலுகரப் பயன்பாடு கண்டறியப்பட்டது. இங்கு, வன்றொடர்க் குற்றியலுகரமும் மென்றொடர்க் குற்றியலுகரமும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

**அட்டவணை 3: வன்றொடர்க் குற்றியலுகரம் மென்றொடர்க் குற்றியலுகரம்**

| குற்றியலுகர வகை | விளக்கம் | சொற்கள் |
|---|---|---|
| வன்றொடர்க் குற்றியலுகரம் | வல்லினமெய்யின் வருகை | கோலத்து எம்மானார்க்கு, அவர்க்கு |
| மென்றொடர்க் குற்றியலுகரம் | மெல்லினமெய்யின் வருகை | என்பு, அன்பு, நெஞ்சு |

### 3. அற்புதத் திருவந்தாதி – பாடல் 8 – அவன் அருளின் தன்மை

ஆயினேன் ஆள்அவனுக்கு; அன்றே பெறற்கரியன்

ஆயினேன்; அஃது அன்றே ஆமாறு – தூய... (திருப்பாடல் 8)

இப்பாடலில், குற்றியலுகரப் பயன்பாடு கண்டறியப்பட்டது. இங்கு, வன்றொடர்க்

குற்றியலுகரமும் ஆய்தத் தொடர் குற்றியலுகரமும் உயிர்த்தொடர்க் குற்றியலுகரமும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

**அட்டவணை 4: வன்றொடர்க் குற்றியலுகரம், ஆய்தத் தொடர் குற்றியலுகரம் உயிர்த்தொடர்க் குற்றியலுகரம்**

| குற்றியலுகர வகை | விளக்கம் | சொற்கள் |
|---|---|---|
| வன்றொடர்க் குற்றியலுகரம் | வல்லினமெய்யின் வருகை | அவனுக்கு |
| ஆய்தத் தொடர்க் குற்றியலுகரம் | ஆய்த எழுத்தின் வருகை | அஃது |
| உயிர்த்தொடர்க் குற்றியலுகரம் | உயிர்மெய் வடிவின் வருகை | ஆமாறு |

**4. அற்புதத் திருவந்தாதி – பாடல் 10 – எனக்கு அரியது உண்டா?**

எனக்கு இனிய எம்மானை, ஈசனை யானென்றும்

மனக்கு இனிய வைப்பாக வைத்தேன் – எனக்குஅவனைக்

உண்டே எனக்கு அரியது ஒன்று?... *(திருப்பாடல் 10)*

இப்பாடலில், குற்றியலுகரப் பயன்பாடு கண்டறியப்பட்டது. இங்கு, வன்றொடர்க் குற்றியலுகரமும் மென்றொடர்க் குற்றியலுகரமும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

**அட்டவணை 5: வன்றொடர்க் குற்றியலுகரமும் மென்றொடர்க் குற்றியலுகரமும்**

| குற்றியலுகர வகை | விளக்கம் | சொற்கள் |
|---|---|---|
| வன்றொடர்க் குற்றியலுகரம் | வல்லினமெய்யின் வருகை | எனக்கு, மனக்கு |
| மென்றொடர்க் குற்றியலுகரம் | மெல்லினமெய்யின் வருகை | ஒன்று |

**5. அற்புதத் திருவந்தாதி – பாடல் 12 – அதுதானா?**

அதுவே பிரானமாறு: ஆட்கொள்ளுமாறும்

பனிக்கு அணங்கு கண்ணியார், ஒள்நுதலின் மேல்ஓர்

தனிக்கண் அங்கு வைத்தார் தகவு?... *(திருப்பாடல் 10)*

இப்பாடலில், குற்றியலுகரப் பயன்பாடு கண்டறியப்பட்டது. இங்கு, உயிர்த்தொடர்க் குற்றியலுகரமும் வன்றொடர்க் குற்றியலுகரமும் மென்றொடர்க் குற்றியலுகரமும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

**அட்டவணை 6: உயிர்த்தொடர்க் குற்றியலுகரம், வன்றொடர்க் குற்றியலுகரம், மென்றொடர்க் குற்றியலுகரம்**

| குற்றியலுகர வகை | விளக்கம் | சொற்கள் |
|---|---|---|
| உயிர்த்தொடர்க் குற்றியலுகரம் | உயிர்மெய் வடிவின் வருகை | பிரானமாறு |
| வன்றொடர்க் குற்றியலுகரம் | வல்லினமெய்யின் வருகை | பனிக்கு |
| மென்றொடர்க் குற்றியலுகரம் | மெல்லினமெய்யின் வருகை | அணங்கு, அங்கு |

**6. அற்புதத் திருவந்தாதி – பாடல் 14 – பெருஞ் சேமம்**

தானே ஓர் பூண்ஆகத் தால்பொலிற்று

பொங்கழல்சேர் நஞ்சுமிழும்

நீள்தாகத் தானை நினைந்து... *(திருப்பாடல் 14)*

இப்பாடலில், குற்றியலுகரப் பயன்பாடு கண்டறியப்பட்டது. இங்கு, வன்றொடர்க் குற்றியலுகரமும் மென்றொடர்க் குற்றியலுகரமும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

**அட்டவணை 7: வன்றொடர்க் குற்றியலுகரமும் மென்றொடர்க் குற்றியலுகரமும்**

| குற்றியலுகர வகை | விளக்கம் | சொற்கள் |
|---|---|---|
| வன்றொடர்க் குற்றியலுகரம் | வல்லினமெய்யின் வருகை | பொலிற்று |
| மென்றொடர்க் குற்றியலுகரம் | மெல்லினமெய்யின் வருகை | நினைந்து |

**7. அற்புதத் திருவந்தாதி – பாடல் 21 – அட்டமூர்த்தி**

அவனே புவி, புனல், காற்று ஆவான்; அவனே

ஞான மயனாகி நின்றனும் வந்து... *(திருப்பாடல் 21)*

இப்பாடலில், குற்றியலுகரப் பயன்பாடு கண்டறியப்பட்டது. இங்கு, வன்றொடர்க் குற்றியலுகரமும் மென்றொடர்க் குற்றியலுகரமும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

**அட்டவணை 8: வன்றொடர்க் குற்றியலுகரமும் மென்றொடர்க் குற்றியலுகரமும்**

| குற்றியலுகர வகை | விளக்கம் | சொற்கள் |
|---|---|---|
| வன்றொடர்க் குற்றியலுகரம் | வல்லினமெய்யின் வருகை | காற்று |
| மென்றொடர்க் குற்றியலுகரம் | மெல்லினமெய்யின் வருகை | வந்து |

*8. அற்புதத் திருவந்தாதி – பாடல் 28 –* எங்கும் பாம்பு

பூணாக ஒன்று புனைந்து ஒன்று பொங்கு அதனின்

தாணாக மேல்மிளிர நன்கு அமைத்து... *(திருப்பாடல் 28)*

இப்பாடலில், குற்றியலுகரப் பயன்பாடு

கண்டறியப்பட்டது. இங்கு, மென்றொடர்க் குற்றியலுகரமும் வன்றொடர்க் குற்றியலுகரமும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

**அட்டவணை 9: மென்றொடர்க் குற்றியலுகரமும் வன்றொடர்க் குற்றியலுகரமும்**

| குற்றியலுகர வகை | விளக்கம் | சொற்கள் |
|---|---|---|
| மென்றொடர்க் குற்றியலுகரம் | மெல்லினமெய்யின் வருகை | ஒன்று, புனைந்து, பொங்கு, நன்கு |
| வன்றொடர்க் குற்றியலுகரம் | வல்லினமெய்யின் வருகை | அமைத்து |

### 9. அற்புதத் திருவந்தாதி – பாடல் 70 – எரியில் ஆடும் இடம்

எமக்கு இதுவோ பேராசை; என்றும் தவிராது;

எமக்கு ஒருநாள் காட்டு தியோ எந்தாய்?

பொங்கு இரவில் ஏந்து எரிபாய்ந்து ஆடும் இடம்... (திருப்பாடல் 70)

இப்பாடலில், குற்றியலுகரப் பயன்பாடு கண்டறியப்பட்டது. இங்கு, வன்றொடர்க் குற்றியலுகரமும் மென்றொடர்க் குற்றியலுகரமும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

**அட்டவணை 9: வன்றொடர்க் குற்றியலுகரமும் மென்றொடர்க் குற்றியலுகரமும்**

| குற்றியலுகர வகை | விளக்கம் | சொற்கள் |
|---|---|---|
| வன்றொடர்க் குற்றியலுகரம் | வல்லினமெய்யின் வருகை | எமக்கு |
| மென்றொடர்க் குற்றியலுகரம் | மெல்லினமெய்யின் வருகை | பொங்கு, ஏந்து, எரிபாய்ந்து |

### 10. அற்புதத் திருவந்தாதி – பாடல் 79 – அடியவர்களின் பெருமிதம்

அணிந்தவரை ஏத்தத் –

துணிந்து என்றும் எந்தையார்க்கு ஆட்செய்யப்

பெற்ற இதுகொலோ

சிந்தையார்க் குள்ள செருக்கு... (திருப்பாடல் 79)

இப்பாடலில், குற்றியலுகரப் பயன்பாடு கண்டறியப்பட்டது. இங்கு, மென்றொடர்க் குற்றியலுகரமும் வன்றொடர்க் குற்றியலுகரமும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

**அட்டவணை 10: மென்றொடர்க் குற்றியலுகரமும் வன்றொடர்க் குற்றியலுகரமும்**

| குற்றியலுகர வகை | விளக்கம் | சொற்கள் |
|---|---|---|
| மென்றொடர்க் குற்றியலுகரம் | மெல்லினமெய்யின் வருகை | துணிந்து |
| வன்றொடர்க் குற்றியலுகரம் | வல்லினமெய்யின் வருகை | எந்தையார்க்கு, செருக்கு |

## ஆய்வின் கலந்துரையாடல்

அற்புதத் திருவந்தாதி பாடல்களில் பெரும்பாலான பாடல்களில் குற்றியலுகர பயன்பாட்டினை காணமுடிகின்றது. குற்றியலுகரம் மொத்தம் 6 வகைகளைக் கொண்டுள்ளன. அற்புதத் திருவந்தாதி பாடல்களில், வன்றொடர்க் குற்றியலுகரம், மென்றொடர்க் குற்றியலுகரம், ஆய்தத் தொடர்க் குற்றியலுகரம், உயிர்த்தொடர்க் குற்றியலுகரம் ஆகியவை பயன்படுதப்பட்டுள்ளன என்பது இங்கு புலப்படுகிறது. இது போன்ற சிற்றிலக்கியங்கள் நமக்கு தமிழ் இலக்கணத்தைப் பற்றி மேலும் தெரிந்து கொள்ள சிறந்த சாதனமாக விளங்குகிறது என்பது இவ்வாய்வின் கலந்துரையாடலாக அமைகிறது.

## முடிவுரை

இந்த ஆய்வின் வழி அற்புதத் திருவந்தாதியில் அமைந்துள்ள பாடல்களில் குற்றியலுகர இலக்கணத்தின் பயன்பாடு சான்றுகளுடன் கண்டறியப்பட்டன. அற்புதத் திருவந்தாதியில் மொத்தம் 101 பாடல்கள் இடம்பெற்றுள்ளன. அதில் 10 பாடல்கள் இவ்வாய்வுக்கு தெரிவு செய்யப்பட்டு, குற்றியலுகரத்தின் இலக்கண பயன்பாடு அப்பாடல்களில் இடம்பெற்றுள்ளன என்பது ஆய்வின் முடிவாகக் கிடைத்துள்ளது. சிற்றிலக்கிய நூலான அற்புதத் திருவந்தாதி காரைக்காலம்மையார் சிவபெருமானின் மீது கொண்ட அன்பையும், அக்கறையையும், காதலையும், பத்தியையும் பறைசாற்றும் வகையில் அமைந்துள்ளது. சிற்றிலக்கியத்தின் மூலம் கற்போர், வாசிப்போர் தமிழ் இலக்கணத்தின் சுவையை உணரவும் முடியும் என்பதை இந்த அற்புதத் திருவந்தாதி நமக்கு புலப்படுத்துகிறது. தமிழ் இலக்கியத்திலிருந்து இலக்கணம் பிறந்தது என்பது நாம் அறிந்த ஒன்று. நமக்கு இலக்கண விதியில் ஏதேனும் ஐயம் நேரின் இலக்கியங்களைச் சென்று தேடிப்பார்த்து ஐயம் தெளிதல் வேண்டும் என்பதினை இவ்வாய்வு நமக்கு புலப்படுத்துகிறது.

**References**

Balakrishnan, L. (2021). Tamiḻmoḻi Ilakkaac Ciappuka Ōr Āyvu [Nuances Of Grammar In Tamil Language]. *Muallim Journal of Social Science and Humanities*, 69–74. https://doi.org/10.33306/mjssh/161

Ghanasundaram, K. S. (2022, February 26 *An Innovation through the Comic Strip in the Canva App to Teach Kutriyalugaram*. https://www.inamtamil.com/index.php/journal/article/view/34

Kunsuraman, S., & M. a. R. Annamalai, M. D. (2022). The usage of 'Kutriyalikaram' in Thirukkural. *Malaysian Journal of Tamil*, *3*(1). https://kpatmalaysia.com/ojs/index.php/mjt/article/view/107/92

Subramaniam, J. S., & M.A.R Annamalai, M. D. M. A. R. A. (2024). A Study on KutriyalukaraminThirukkural. *Malaysian Journal of Tamil*, *3*(1). https://kpatmalaysia.com/ojs/index.php/mjt/article/view/108/88

Suppu Reddiyar, N. (2000). *Tamiḻ Payiṟṟu Muṟai (Tamil Teaching Technique)*. Chennai: Steadfast Press.

*International Conference on Language Teaching and Learning in South East Asian countries - IIETS* - Special Issue Vol. 7 No. 29 (2022) (Inam: Multidisciplinary International E- Journal of Tamil Studies). (n.d.). https://www.inamtamil.com/index.php/journal/issue/view/3

Manonmani Devi Annamalai. (2025). *Poetical Grammar Simplified For All* (1st ed.). Vinveli Publications.

*Tamil Virtual Academy*. (n.d.).

https://www.tamilvu.org/ta/courses-degree-p103-p1034-html-p1034511-26242

*Tamil Virtual Academy "Thematurath Tamilosai Ulakamelam Paravum Vagai Seithal Veendum*". (n.d.). https://www.tamilvu.org/

*Durga & Nallasivam.* (2022). Atputha Thiruvanthathiyil Pakthiyunarvu. *Journal of Pranav Tamiliyal*. *2*(1).

Mohammad Se. Seeni Naina. (2022). *Nalla Tamil Ilakkanam*. (4th ed.). Ungal Kural Enterprose.